# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# காயல்பட்டணம்
## விற்பனை விழா 16.05.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 16.05.2022ஆம் நாளன்று விற்பனை விழா நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான் அவர்கள் முன்னிலை வகிக்க, கல்லூரி முதல்வர் முனைவர் இரா.செ. வாசுகி M.A., Ph.D., DGT தலைமையில் நடைபெற்றது. விற்பனை விழாவின் சிறப்பு விருந்தினர்களாக CEO MEEFA GROUP EVENT Manager திருமதி. ஹலிமா தமன்னா மற்றும் ENTREPRENEUR TRAINER முனைவர் S. மகாலட்சுமி அவர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் 45 விற்பனையகங்கள் செயல்பட்டன. இதில் 30 உணவுசார் விற்பனையகங்களும், 15 உணவு சாரா பல்பொருள் அங்காடிகளும் செயல்பட்டன. இவ்விழாவில் பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்னால் மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை வாவு வஜீஹா தொழில் முனைவோர் இயக்கம் (ED Cell), தொழில் ஊக்குநர் அமைப்பு (Startup Cell) பொருளாதாரத்துறை, வணிக செயலாற்றியல் துறை மற்றும் வணிகவியல் துறை ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.